செ.வெ. எண்: 364 நாள்: 24.06.2012

# செய்தி வெளியீடு

அரசின் நலத் திட்டங்களை மக்களிடையே எடுத்துச் சென்று, அரசுக்கும், மக்களுக்கும் பாலமாக செயல்படும் துறை வருவாய்த் துறை ஆகும்.

இப்படிப்பட்ட இன்றியமையாத் துறையான வருவாய்த் துறையின் பணிகள் சிறக்கும் வண்ணம் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டத்தை பிரித்து, புதிதாக உருவாக்கப்பட்ட, திருப்பூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், தீயணைப்புத்துறை அலுவலகம், ஒருங்கிணைந்த நீதி மன்ற வளாகம், ஏனைய அரசு அலுவலகங்கள், அரசு அலுவலர்கள் தங்குவதற்கான குடியிருப்புகள், மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகம், விருந்தினர் மாளிகை ஆகியவற்றுடன் கூடிய மாவட்ட பெருந்திட்ட வளாகத்தினை 52 கோடியே 13 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள்.

மேலும், மாவட்ட பெருந்திட்ட வளாகத்தினை ஏற்படுத்தத் தேவைப்படும் நிலங்களை இந்து சமய அறநிலையத்துறையிடமிருந்து பெறும் வகையில் 51 கோடியே 25 லட்சத்து 39 ஆயிரத்து 800 ரூபாயை இந்து சமய அறநிலையத்துறைக்கு வழங்குவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

திருப்பூர் நகரின் பல்வேறு பகுதிகளில் சிறிய கட்டடங்களில் அரசு அலுவலகங்கள் இயங்கிவருவதால், அந்த அலுவலகங்களுக்குச் செல்லும் மக்கள் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இப்புதிய பெருந் திட்ட வளாகம் கட்டுவதன் மூலம் பல்வேறு பகுதிகளில் சிறிய சிறிய கட்டங்களில் இயங்கி வரும் அரசு அலுவலகங்கள் அனைத்தும் ஒரே வளாகத்தில் அமைவதுடன், பொதுமக்களின் தேவைகள் எளிதில் பூர்த்தி செய்ய வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 9.
நாள் : 24.6.2012.